# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

### <u>இந்திய நன்கொடை உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பல்லின மும்மொழி பாடசாலை பொலன்னறுவையில் அங்குரார்ப்பணம்</u>

இந்திய நன்கொடை உதவியின் கீழ் பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட பல்லின மும்மொழி பாடசாலை 2025 ஒக்டோபர்31 ஆம்திகதி இலங்கை பிரதமரும் கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான மாண்புமிகு பிரதமர் டாக்டர் ஹரிணி அமர சூரிய மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா ஆகியோரால் கூட்டாக திறந்து வைக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் துறை பிரதி அமைச்சர் கௌரவ டிபி சரத், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுனில் இரத்தினசிறி கல்வி அமைச்சின் செயலாளர் திரு நாலக கழுவேவ, வட மத்திய மாகாணத்தின் முதலமைச்சரின் செயலாளர் திரு ஜெயநாத் உள்ளிட்ட ஏனைய பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

2. உயர் பெறுபேற்றினை தரக்கூடிய சமூக அபிவிருத்தி திட்டமாக பல்லினங்கள், பல்கலாசாரம் ஆகியவை காணப்படும் ஒரு சூழலில் தரமான கல்வி வாய்ப்புகளை வழங்கும் நோக்குடன் பாடசாலை ஒன்றினை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று இருஅரசாங்கங்கள் இடையிலும்2017 பெப்ரவரி கைச்சாத்திடப்பட்டது. இந்த திட்டத்துக்கான இந்திய நிதி உதவி இலங்கை ரூபா 320 மில்லியனுக்கும் அதிகமானதாகும். இப்பாடசாலையின் ஒட்டுமொத்த வளாகம் தொடர்பான திட்டங்களுக்கு அமைவா ஒக்டோபர் 31 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட கட்டடத்துக்கு மேலதிகமாக இலங்கை அரசாங்கத்தினால் மேலும் பல நிர்மாண பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

3. இந்நிகழ்வில் உரை நிகழ்த்தி இருந்த பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்கள் இத்திட்டத்தினை முன்னெடுத்தமைக்காக இந்திய மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் தனது நன்றியினை தெரிவித்திருந்தார். இந்த கட்டமைப்பு கையளிக்கப்பட்ட நிலையில் இந்தியா தனது கடமையினை நிறைவேற்றியுள்ளது, ஆனால் இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்தை சார்ந்ததாகும் என அவர் இங்கு குறிப்பிட்டிருந்தார்.

4. கல்வித்துறையில் குறிப்பாக ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் போதிய கட்டமைப்பு வசதிகளின்மை போன்ற பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்கும் நடவடிக்கைகள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டிருந்த அவர், இவ்வாறான நிலையில் பல்வேறு அபிவிருத்தி

ஒத்துழைப்பு திட்டங்கள் ஊடாக இந்தியா வழங்கும் ஆதரவினையும் பாராட்டினார்.

5. இங்கு உரை நிகழ்த்தி இருந்த உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள், இரு நாடுகளதும் மக்களின் நல்வாழ்வு குறித்து இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்கள் கொண்டிருக்கும் பகிரப்பட்ட அர்ப்பணிப்பினை சுட்டிக் காட்டியிருந்தார். இந்த பகிரப்பட்ட அர்ப்பணிப்பானது இரு நாடுகளினதும் அணுகுமுறைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் கல்வித்துறையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக இச்சந்தர்ப்பத்தில் உயர் ஸ்தானிகர் அவர்கள் குறிப்பிட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் இந்தியாவினுடைய தேசிய கல்விக் கொள்கை மற்றும் கட்டமைப்பு மறுசீரமைப்புகள் கணிசமான நிலை மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பதாகவும், அதே போல இலங்கையை பொறுத்தவரையில் பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டில் புதிய கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையையும் குறிப்பிட்டிருந்தார். இவ்விவகாரத்தில் குறித்த நிலைமாற்றுப் பயணத்தின் சகல புறங்களிலும் வேறுபட்ட பரிணாமங்கள் ஊடாக இலங்கையுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு இந்தியா எப்போதும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அது மட்டுமல்லாமல் நாட்டின் கல்வித் துறையில் உயர் பொறுப்பேற்றை தரக்கூடிய அபிவிருத்தி திட்டங்களை இந்தியா தொடர்ந்து முன்னெடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

6. இலங்கையின் கல்வித் துறையில் கடந்த காலத்தில் இந்தியா மேற்கொண்டிருந்த அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களாக நாடளாவிய ரீதியில் நூற்றுக்கணக்கான ஸ்தாபனங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மற்றும் டிஜிட்டல் சாதனங்கள் கையளிப்பு, புத்தளம், மட்டக்களப்பு மற்றும் நுவரெலியாவில் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டமை மற்றும் அவற்றுக்கான ஆதரவு வழங்கப்பட்டமை, நாட்டில் காணப்படும் பல்கலைக்கழகங்களில் பாரிய கேட்போர் கூடமாக ருகுண பல்கலைக்கழகத்தில் ரவீந்திரநாத் தாகூர் ஞாபகார்த்த கேட்போர் கூடம் நிர்மாணிப்பு, கடந்த வருடம் பெருந்தோட்ட பகுதிகளைச் சேர்ந்த 2000க்கும் அதிகமான ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட STEM பாடங்களுக்கான ஆசிரியர் பயிற்சிகள், தென் மாகாணத்தில் காணப்படும் பாடசாலைகளில் 200 ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் கணினி கூடங்கள் அமைப்பு போன்ற உதவி திட்டங்களை குறிப்பிட முடியும். இந்தியாவில் உயர் கல்வியை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மாணவர்களுக்கு 200-க்கும் அதிகமான புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் இலங்கையில் கல்வியை தொடர்வதற்காக 500க்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்தியாவினால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

*****

கொழும்பு
31 ஒக்டோபர் 2025